**ஆராய்ச்சிக்கட்டுவ பிரதேச சபை - 2023**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

ஆராய்ச்சிக்கட்டுவ பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமை கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரசச் சட்டத்தின் 172(1) ஆம் உப பிரிவு (பொருத்தமான வகையில்) மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எமது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் தரப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2023 திசெம்பர் 31 இல் உள்ளளவாறான ஆராய்ச்சிக்கட்டுவ பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப் பாய்ச்சல் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்படும் கணக்கீட்டு நடைமுறைகளுக்கு இணங்க உண்மையாக மற்றும் நியாயமாக வெளிப்படுத்துகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்பலை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு நான் நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் முனைப்பழியுள்ள அபிப்பராயம் வெளிப்படுத்துகின்றேன்.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க என்னால் கணக்காய்வு செய்யப்பட்டது. இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு, இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் வகையில் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு சான்றுகள் போதியளவானவை மற்றும் பொருத்தமானவை என்பது எனது நம்பிக்கையாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தினதும் தொடர்புபட்ட நிருவகிக்கின்ற தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்தலும் நியாயமாகச் சமர்ப்பித்தலும் மற்றும் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்ற நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமான வகையில் தேவையான உள்ளக கட்டுப்பாட்டினைத் தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு, நிருவகிக்கின்ற தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள் சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

### 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் அமுல்படுத்தப்படுகின்ற பொருளாதார தீர்மானம் தொடர்பான ஏற்படுத்துகின்ற தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமத்தின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் நடவடிக்கை எடுக்கப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் ஆகிய காரணங்களினால் ஏற்படுவதினாலாகும்.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுக்ள மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்தப்படுகின்ற கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத் தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை, முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் வெளிப்படுத்தல்கள் என்பன மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கங்களுக்கா அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளன எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வகையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்பவருனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வு நோக்கொல்லை விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களைச் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள் நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாகவும் பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையின் வழங்கப்பட்ட ஏனைய பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபையின் நிறுவனம் செயற்படுகின்றதா எனவும்,

- தனது அதிகாரங்கள், கடமைகள், மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா எனவும்,

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா எனவும் ஆகும்.

## 1.5 ஏனைய சட்டரீதியான தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தில் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பான விசேட ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

(அ) பிரதேச சபையின் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1) (ஈ) (iii) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் கடந்த வருடத்தை ஒத்திருந்தன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(i)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிராகரம் கடந்த வருடத்தில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் முன்வைக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | செயலாளரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் நன்கொடையாக பெறப்பட்ட ரூபா 100,000 பெறுமதியான கணனி கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | நாளேட்டு பதிவுகள் ஊடாக திருத்தங்கள் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2023 ஆம் ஆண்டிற்கான நிலையான வைப்பு வட்டி வருமானம் ரூபா 2,570,044 ஆல் குறைத்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | நாளேட்டு பதிவுகள் ஊடாக திருத்தங்கள் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | -மேற்படி- |
| (இ) | 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெறவேண்டிய ரூபா 5,050,943 ஆன நிலையான வைப்பு மீதான வட்டி வருமானம் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | -மேற்படி- | -மேற்படி- |
| (ஈ) | 18 கோவை இறாக்கைகள் கொள்வனவு செய்வதற்காக செலவழித்த ரூபா 423,652 ஆன பெறுமதி எந்திரம் மற்றும் உபகரணங்கள் கணக்கில் இரண்டு தடவை கணக்கீடு செய்யப் பட்டிருந்ததுடன் அதே தொகையில் உபகரயங்கள் கணக்கு அதிகரித்தக் காட்டப்பட்டிருந்தது. | அந்த தவறுகள் திருத்தப்படும். | -மேற்படி- |
| (உ) | முத்திரை வரிக் குறைவுக் கணக்காக சீராக்க வெண்டியிருந்த பெறுமதி ரூபா 71,602,246 ஆக உள்ள போதிலும் | ரூபா 36,595,987 ஆன குறைவாக கணக்கீடு | -மேற்படி- |

| | | |
|---|---|---|
| மீளாய்வாண்டு இறுதியில் ரூபா 35,006,259 சீரக்கல் செய்யப்பட்டு ரூபா 36,595,987 குறைவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | செய்யப்பட்ட முத்திரை வரி சரியாக சீராக்கப்படும். | |
| (i) 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெறவேண்டிய முத்திரை வரியின் பெறுமதி ரூபா 66,195,372 ஆக இருந்த பொதிலும் ரூபா 31,091,274 ஆன தொகையான கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | கணக்கீடு செய்வதற்கு முறையாக நடவடிக்கை எடுக்கப்படும். | கணக்கீடு செய்வதற்கு முறையாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**1.7 இணக்கமின்மைகள்**

**1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், என்பவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மை | செயலாளரின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டம் | | | |
| (i) உப பிரிவு இல. 126 (XXVII) | மீனவர்களுடைய நலன்புரி வசதிகளிற்காக உப விதிகள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் சொல்லப்பட்ட பிரிவிற்காக உப விதிகளை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பிரதேச சபைகள் அதிகாரச்சட்ட விதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ii) பிரிவு 129(2)(ஆ) மற்றும் (ஊ) | உள்ளூராட்சி சபைக்கு செலுத்த வெண்டிய குத்தகை வாடகை, கடை வாடகைகள், நீதி மன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரை வரி முறைப்படி கேரிக்கப்பட்டிருக்கவில்லை. | உள்ளூராட்சி அதிகாரசபைகளிற்கு கடைக்க வேண்டிய குத்தகை வாடகைகள் மற்றும் கடை வாடகைகளை பெறுவதற்கு முறைப்படி கடிதங்கள் அனுப்பப்பட்டிருந்ததுடன் ஆதனங்கள் தொடர்பானவை கடினமாக உள்ளதுடன் 2008 மற்றும் 2009 ஆம் ஆண்டுகளிற்கான நீதி மன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரை வரி என்பன பதிவழிப்பதற்கு அனுமதி வேண்டியிருந்தது. | பிரதேச சபைகள் அதிகாரச்சட்ட விதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | 1988 இன் பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிர்வாக) விதிகள் விதி இல. 05 | நிதி மற்றும் காட்சியறை கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பில் போதிய உள்ளக கணக்காய்வு நடாத்தப்பட்டிருக்கவில்லை. | 2024 ஆம் ஆண்டிற்கான உள்ளக கணக்காய்வு திட்டத்தில் இது உள்ளடக்கப்பட்டிருந்தது. | பிரதேச சபைகள் அதிகாரச்சட்ட விதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | **பொது நிர்வாக சுற்றறிக்கை** 30/2016 இன் 3.1 ஆம் பிரிவு | பிரிவின் பிரகாரம், எரிபொருள் பரிசோதனை செய்யப்பட வேண்டிய போதிலும் 03 சந்தர்ப்பங்களில் இது 07 வாகனங்களுக்காக செய்யப்பட்டிருக்கவில்லை. | எந்திரவியல் பொறியியலாளர் இதனைச் செய்வதற்கு அறிவித்திருந்தர். | சுற்றறக்கைப் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா 30,000,888 தொகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்ததாக முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை மிகைத்த வருமானம் ரூபா 15,063,907 ஆகும்.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் என்பன

செயலாளரால் சமர்ப்பிக்கப்பட்ட கதவல்களின் பிரகாரம், மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாகச் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம், நிலுவை வருமானம் என்பன தொடர்பான தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

| | 2023 | | | | 2022 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| **வருமான மூலம்** | **மதிப்பீடு செய்யப் பட்ட வருமானம்** | **பட்டியலி டப்பட்ட வருமானம்** | **சேகரிக்கப் பட்ட வருமானம்** | **திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவை** | **மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம்** | **பட்டியலி டப்பட்ட வருமானம்** | **சேகரிக்கப் பட்ட வருமானம்** | **திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவை** |
| | ரூபா.'000 | ரூபா.'000 | ரூபா.'000 | ரூபா.'000 | ரூபா.'000 | ரூபா.'000 | ரூபா.'000 | ரூபா.'000 |
| வீதவரியும் வரியும் | 7,752 | 8,080 | 4,297 | 14,081 | 7,652 | 7,455 | 3,112 | 17,533 |
| வாடகை | 7,003 | 9,834 | 9,363 | 2,014 | 7,330 | 6,288 | 5,929 | 1,700 |
| உத்தரவுப் பத்திரக் கட்டணம் | 1,022 | 3,664 | 530 | 3,363 | 904 | 3,422 | 1,843 | 1,801 |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| ஏனைய வருமானம் | 1,043 | 13,990 | 5,995 | - | 1,596 | 4,654 | 4,654 | - |
| மொத்தம் | 16,820 | 35,568 | 20,185 | 19,458 | 17,482 | 21,819 | 15,538 | 21,034 |

### 2.2.2 வருமானம் சேகரித்தலில் செயலாற்றல்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | செயலாளரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 12,852,083 தொகையான வீத வரி நிலுவைகள், ரூபா 373,874 தொகையான ஏக்கர் வரிகள், ரூபா 672,116 தொகையான வாடகை நிலுவைகள் மற்றும் ரூபா 2,003,536 தொகையான நீர் வரி நிலுவை என்பன அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிலுவைகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | வருமான நிலுவைகளை அறவிடுவதற்கு உடனடியாக ஒழுங்குகள் செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 7,834,766 தொகையான நீதி மன்ற தண்டப்பணம் மற்றும் ரூபா 35,104,098 தொகையான முத்திரை வரி பிதம செயலாளரிடமிருந்து அறவிட வேண்டியிருந்தது. | 2024.05.13 இல் உள்ளவாறு நீதி மன்ற தண்டப்பண நிலுவை ரூபா 4,061,016 ஆக இருந்ததுடன் அத் திகதியில் முத்திரை வரி நிலுவையாக இருக்கவில்லை. | நீதி மன்ற தண்டப் பணம் மற்றும் முத்திரை வரி என்பவற்றின் நிலுவை விரைவாக சேகரிக்கப்பட வேண்டும். |
| (இ) | ஆராய்ச்சிகட்டுவ வராந்த சந்தையின் குத்தகையில் தனி விண்ணப்பத்திற்கு கொள்வனவு குழுவின் தீர்மானம் ஏனைய உறுப்பினர்கள் இல்லாமல் தலைவரால் அனுமதிக்கப்பட்டிருந்தது. குத்தகை உடன்படிக்கை பிரகாரம் ஆண்டின் முதல் 10 மாதங்களிற்குள் 10 சமமான தவணைப் பணங்களில் ரூபா 4,520,000 ஆன வருடாந்த பெறுமதி செலுத்தப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை. அதேபோல சபையால் செலுத்தப்பட்டிருந்த 2023 ஆம் ஆண்டின் முதல் 06 மாதங்களிற்காக ரூபா 107,201 மின்சார பட்டில் குத்தகையால் செலுத்த வேண்டியிருந்தது. | செலுத்தப்பட்டிருந்த ரூபா 1,195,000 தொகை குறைபாடுகள் தொடர்ச்சியற்றது என உறுதிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதுடன் 2023.06.26 இன் பின்னர் 2023.11.06 ஆந் திகதி வரை செலுத்த வேண்டிய தண்டப் பணங்களிலிருந்து ரூபா 37,000 தொகை அறவிடப் பட்டிருந்ததுடன் ரூபா 38,000 தொகை செலுத்த வேண்டிய மின்சார பட்டியலிற்காக அறவிடப்பட்டிருந்தது. | சகல உறுப்பினர்களும் கொள்வனவு குழு அறிக்கையில் கையொப்பமிடப்பட வேண்டியதுடன் இருக்கின்ற மாதாந்த வாடகை முறைபடி அறவிடப்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | செயலாளரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | (i). சுற்றாடல் அனுமதிப் பத்திரம் பெறவேண்டிய 40 கைத்தொழில்கள் 2015 இலிருந்து சுற்றாடல் அனுமதிப் பத்திரங்களை பெற்றிருக்காததுடன் சபையானது இதன் காரணமாக ரூபா 280,781 ஆன வருமானத்தை | காலக்கிரமத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | சுற்றாடல் அனுமதிப் பத்திரம் பெறுவதற்கு கைத்தொழிலாளர்கள் நெறிப்படுத்த வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | இழந்திருந்ததுடன் சபையின் பொறுப்புடைய உத்தியோகத்தர்கள் அதனை தவறிவிட்டனர். | | |
| | (ii). உள்ளூராட்சி சபைகளின் சுற்றாடல் பாதுகாப்பு பிரிவு மற்றும் அவற்றினுடைய அமுலாக்கலின் அனுமதிக்காக உள்ளூராட்சி ஆணையாளர் மற்றும் சுற்றாடல் செயலாளரின் 1995 மார்ச் 25 ஆந் திகதிய ව/පා/පූ/ජී/6/3.3.5/95 ஆம் இலக்க கடிதத்தில் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டிருந்தது. மேலும், அவற்றின் பட்டயம் 3.2.3. இற்காக 1996 பெப்ரவரி 26 இல் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டிருந்தது. அதன் பந்திகள் I, II, III, IV இன் பிரகாரம் எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | காலக்கிரமத்தில் அவசியமான நடவடிக்கை எடுக்கப்படும். | உள்ளூராட்சி ஆணையாளரின் அறிவுறுத்தல் பிரகாரம், நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | சபையால் உடமையாக்கப்பபட்ட காணிகளிற்காக 15 பெயர் பலகைகள் கொள்வனவு செய்வதற்கு2923 செப்தெம்பர் 4 இல் ரூபா 97,500 செலவழிக்கப்பட்டிருந்த போதிலும், அந்த பெயர் பலகைகள் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | இந்த நடவடிக்கையை நிறைவேற்றுவதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டிருந்தது. | காணிகளில் பெயர் பலகையை பொருத்துவதற்கு ஒழுங்குகள் செய்யப்பட வேண்டும். |
| (இ) | 2013 இன் 01 ஆம் இலக்க சமுதாய அடிப்படை அமைப்புக்களின் (நீர் மற்றும் சுற்றாடல் சுகாதாரம்) தாபிப்பு மற்றும் பிரமாணப்படுத்தலிற்கான பட்டயத்தின் பிரகாரம் 20 சமுதாய அடிப்படை அமைப்பக்கள் பதிவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காததுடன் சமுதாய அடிப்படை அமைப்பக்களின் பல்வேறு முறையீனங்கள் மற்றும் பிரச்சனைகள் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. | சபையின் கீழான சமுதாய அடிப்படை அமைப்பக்களின் பதிவு மற்றும் கண்காணிப்பிற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சுகாததார பிரிவில் பதிவு மற்றும் கண்காணிப்பு செய்யப்பட வேண்டும். |
| (ஈ) | நூலகங்களிற்கு வருகைதரும் வாசிப்பாளர்களின் எண்ணிக்கை மிகவும் குறைவாக உள்ள போதிலும் 2023 ஆம் ஆ஡்டில் 04 நூலகங்களிற்காக ரூபா 5,992,266 ஆன செலவினம் ஏற்பட்டிருந்ததுடன் சிறுவர்கள், இளைஞர் மற்றும் வயோதிபர் என்போருக்கும் வாசிப்பில் அக்கறை சேய்வதற்கும் உறுப்பினர்களனை வாசிப்பை அதிகரிக்க செய்வதற்கும் எவ்வித நடவடிக்கையும் எடுக்க்பபட்டிருக்கவில்லை. | காலக்கிரமத்தில் வாசிப்பாளர் எண்ணிக்கையை அதிக்கும் நோக்கில் வாசிப்பு திறன் அபிவிருத்தி மற்றும் சமுதாய பாதுகாப்பு என்பன நடாத்தப்படும். | வாசிப்பு திறனை அபிவிருத்தி செய்வதற்கு நிகழ்ச்சித் திட்டங்கை அமுலாக்கப்பட வேண்டும். |
| (உ) | 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சபைக்கு செலுத்த வேண்டிய கணக்கு மீதியின் பெறுமதி ரூபா 58,840,474 ஆக இருந்தது. | பற்றாக்குறை வருமானத்தை சேகரிப்பதற்கு நிகழ்ச்சித் திட்டங்கள் அமுலாக்கப்படுகின்றன. | நிலுவைகள் உடனடியாக அறவிடப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஊ) | 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சபைக்கு செலுத்த வேண்டிய கணக்கு மீதியின் பெறுமதி ரூபா 5,617,551 ஆக இருந்தது. | நானாவித கடன்கொடுத்தோர் தொகையிலிருந்து செய்யப்பட்ட ரூபா 3,205,770 ஆன கொடுப்பனவுகள் மற்றும் கடன்கொடுத்தோரால் செய்யப்பட்ட கைத்தொழில்கள்என்பன 03.⁚.2022 ஆம் இலக்க சுற்றறிக்கை பிரகாரம் அபிவிருத்தி வேலைகள் நிறுத்தப்பட்டிருந்தும் இதன்படி செயற்பட இயலாதிருந்தது. | கடன்கொடுத்தோரை உடனடியாக தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | செயலாளரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | ஒவ்வொரு 5 ஆண்டுகளிலும் வீத வரிகள் மற்றும் வரிகள் மீளாய்வு செய்ய வேண்டிய போதிலும் வரிகள் மற்றும் வீதவரிகள் 2015 ஆம் ஆண்டில் செய்யப்பட்ட வரிமதிப்பீட்டின் அடிப்படையிலேயெ 2023 ஆம் அண்டிலும் விரிக்கப்பட்டிருந்தது. | வரிகள் மற்றும் வீதவரிகள் வரி மதிப்பீட்டு அறிக்கை பெற்றப்பட உடன் அறவிடப்படும். | வரி மதிப்பீட்டு அறிக்கை உடனடியாக பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 14 குத்தகை ஆதனங்கள் அவை குத்தகைக்கு விட முடியாதிருந்தமையால் பயன்படுத்தப்படது இருந்தது. | 2023 ஆம் ஆண்டு தொடர்பில் 04 சந்தர்ப்பங்களில் ஆதனங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதிலும் விண்ணப்பங்கள் எதுவும் சமர்ப்பிக்கப் பட்டிருக்கவில்லை. | சபையின் ஆதனங்களில் இருந்து அதிகூடிய நலனை பெறுவதற்கு ஒழுங்குகள் செய்யப்பட வேண்டும். |

## 3.3 பயன்படுத்தப்படாத அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்ட ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | செயலாளரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | தயட்ட கிரில்ல நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் ரூபா 6,920,809 கிரயத்தில 2017 இல் கட்டப்பட்ட மனவேறிய உடற் பயிர்ச்சி நிலையத் 2023 ஆண்து வரையும் பயன்படுத்தப்படாது இருந்தது. | காலக்கிரமத்தில் நடவடிக்கை எடுக்கப்படும்.. | அரசாங்க வெலவில் கட்டப்பட்ட பௌதீக வளங்கள் அதிகூடிய நலனை பெறுவதற்கு பயன்படுத்தப்பட வேண்டும். |
| (ஆ) | ரூபா 702,350 ஆன பன்முகப் படுத்தப்பட்ட பாதீட்டு ஏற்பாடுகள் மற்றும் ரூபா 294,425 ஆன சபை நிதிகள் என்பவற்றின் கீழ் ரூபா 996,775 கிரயத்தில நிர்மாணிக்கப்பட்ட உடற்பயிற்சி நிலையம் எவ்வித நலனும் இல்லாமல் பயனற்று இருந்தது. | உடற்பயிற்சி நிலையத்திலிருந்து பெறப்பட்ட வருமானம் குறைவாக உள்ளதுடன் ஏற்கனவெ தேவையான ஒழுங்குகள் 2023 ஆம் அண்டிற்காக அவருக்கு செலுத்த வேண்டிய தொகைக் கொடுப்பனவிற்காக உடற்பயிற்சி நிலையத்திற்கு பொறுப்பான ஆலோசனை | ஏனைய உற்பத்தி வேலைகளில் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| | உத்தியோகத்தருக்கு கிடைத்த தொகையழன் 50 சதவீத கொடுப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | |

### 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | செயலாளரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | சபைக்கு ஒதுக்கப்பட்ட 21 காணிகள் வேலியிடப்பட்டு பாதுகாப்பை உறுதிப் படுதியருந்காததுடன் பயிர்ச் செய்கை குத்தகை வருமானத்தை பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | காணித் துண்டுகளை அளவை செய்வதற்கும் வேலி அடைப்பதற்கும் பெயர் பலகை பொருத்துவதறகும் நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் பயர்ச் செய்கை குத்தகை மற்றும் உழைத்த வருமானம் என்பன பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | காணகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்தம் அதே நேரம் சொத்தக்களை பயன்படுத்தவதற்கு ஒழுங்குகள் செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | சபையின் பகுதியில் கோரப்படாத 48 ஆதனங்கள் உள்ளதுடன் மையங்கள், விளையாட்டு மைதனங்கள், நூலகங்கள், சனசமுக நிலையஙகள், நீரிறைக்கும் இல்லங்கள் மற்றும் பொது சந்தை என்பனவாக இருந்தது. | ஏற்கனவே சொத்துக்களை கையேற்பதற்கான வேண்டுகை செய்யப்பட்டிருந்தது. | உரிய ஆதனங்களின் சட்ட உரிமையை கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | பிரதேச செயலாளர் ஊடாக மனவேரிய ஜகன்கல காணிக்கான சட்ட உரிமை பெறப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | -மேற்படி- | -மேற்படி- |

### 3.5 ஒப்பந்த நிர்வாகத்திலுள்ள குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | செயலாளரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| 2022 ஆம் ஆண்டின் பாதீட்டின் பிரகாரம் மாகாண சபை எல்லை 104 சதுர கிலோ மீற்றராக இருந்ததுடன் வீதியின் நீளம் 492 கிமீ ஆக உளளது. இதில் 20 கிமீ குண்டும் குழியுமாக உள்ளதுடன் 190.5 கிமீ மற்றும் ஏனைய 281.5 கிமீ கிரவல் இடப்பட்டுள்ளது. ஆராச்சிக்கட்டுவ சபை பகுதியில் மொத்த வீதி முறைமையின் 04 சதவீதம் தாரிடப்பட்ட வீதியாக உள்ளது. | உள்ளுராட்சி சபை தாரிடல் மூலம் வீதியை விருத்தி செய்வதற்கு வருமானம் போதாதிருந்தது. | அரசாங்க நிதிகள் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் பயன் படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**3.6 மனிதவள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்புகள் | செயலாளரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
| --- | --- | --- |
| (அ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு அனுமதிக்க்பபட்ட உள்ளபடியான பதவியணி பிரகாரம் இரண்டாம் நிலை பதவியில் 12 வெற்றிடங்களும் ஆரம்ப நிலை தரததில் 02 மிகைகளும் 13 வெற்றிடங்களும் இருந்தன. | பதிலாக மற்றும் ஒப்பந்த அடிப்படையில் வேலை செய்கின்ற நபர் இன்றுவரை அனுமதி பெறப் பட்டிருக்கவில்லை ஊழியர் வேலகள் ஒதுக்கப்பட்டிருந்தது. | சபைக்கு தேவையான பதவியணியை சரியாக இனங்காண வேண்டியதுடன் சொல்லப்பட்ட பதவியணி அனுமதி பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) முன்னைய ஆண்டு சேவைக்கு திரும்பிய 02 ஊழியர்களிடமிருந்து ரூபா 122,500 ஆன மீதி அறவிட வேண்டியிருந்தது. | ரூபா 2,250.00 ஆன தொகை அறவிடப்பட்டிருந்ததுடன் ரூபா 120,250 ஐ அறவிடுவதற்கு சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தது. | நிலுவையாக இருக்கின்ற ஊழியர் கடன்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**3.7 வாகனத் தொகுதியின் முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்புகள் | செயலாளரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
| --- | --- | --- |
| சபைக்கு சொந்தமான 02 உழவு இயந்தி மற்றும் உழவு இயந்திரங்கள் கைதவிர்ப்பதற்கு 2022 ஒக்தோபர் 06 இல் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும் சொல்லப்பட்ட வாகனங்களை கைதவிர்ப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எந்திர பொறியிலாளருக்கு அறிவிக்கப்பட்டிருந்தது. | மிகுதி வாகனங்களை உடனடியாக கைதவிர்க்கப்பட வேண்டும்.. |

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாட்சியும்**

**4.1 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்**

| கணக்காய்வு அவதானிப்புகள் | செயலாளரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
| --- | --- | --- |
| (அ) செயல் நடவடிக்கை திட்டத்தில் குறிப்பிடப்பட்ட 08 வித்தியாசமான பணிகளை வெற்றிகரமாக செய்து முடிப்பதற்கு ரூபா 255,024 செலவழிக்கபபட்டிருந்த போதிலும் எதிர்பார்த்த வெளியீட்டை அடைந்திருக்கவில்லை. | அடுத்துவரும் ஆண்டுகளில் பாதீட்டு ஏற்பாடுகளில் ஒதுக்கப்பட்ட பணத்துடன் வினைத்திறனான வெலையை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | எதிர்பார்த்த இலக்கினை அடைவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) மீளாயவாண்டின் போது 30 வேலைகளிற்காக ரூபா 2,681,000 ஆன ஏற்பாடு செய்யப்பட்டிருந்த போதிலும் 2023 திசெம்பர் 31 அளவில் ரூபா 1,209,000 பெறுமதியான 22 வேலைகள் எதிர்பார்த்த விளைவுகளை அடையாமால் இருந்தது. | காலக் கிரமத்தில் மதிப்பீடுகள் தயாரிக்கபபட்டு மேலும் வேலைகள் செய்யப்படும். | செயல் நடவடிக்கை திட்டத்தின் பிரகாரம் உரிய நிகழ்ச்சிதிட்டம் அமுலாக்குவதற்கும் எதிர்பார்த்த இலக்கினை அடைவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 4.2. நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | செயலாளரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| 10 நிலைபேறான அபிவிருத்தி நோக்குகளிற்கான 14 இலக்குகள் நோக்கங்களை அடைவதற்கு மீளாய்வாண்டிற்காக சபையால் இனங் காணப்பட்டிருந்ததுடன் 2030 நிலைபேறான அபிவிருத்தி நோக்குகளின் பிரகாரம் அடைய வேண்டி இருந்தது. 42 நிகழ்ச்சிதிட்டங்கள் அதன் நோக்கங்களை அடைவதற்கு அமுலாக்கப்பட்டிருந்தது. இதன் விளைவால் அந்த 20 நிகழ்ச்சித் திட்டங்களின் முன்னேற்றத்தை அடைவதற்கு தவறயிருந்ததுடன் அந்த நிகழ்ச்சிதிட்டம் 52 சதவீதத்திலிருந்து 100 சதவீதம் வரையான வீச்சில் இருந்தது. | நிகழ்ச்சித் திட்டங்கள் அமுலாக்கப்பட்ட போதிலும் அவற்றினுடைய முன்னேற்றம் அடையப்பட்டிருக்காததுடன் அடுத்தவரும் ஆண்டுகளில் எதிர்பார்க்கப்பட்ட முன்னேற்றம் அடையப்படும். | நிலைபேறான அபிவிருத்தி இலக்ககளை அடைவதற்கு முயற்சிகள் எடுக்கப்பட வேண்டும். |